# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


## முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 67 /2017

திரு. நிஸார்கான்,
த/பெ லால்கான்,
எண்.49, மேலமணத்தட்டை,
குளித்தலை அஞ்சல், கருர் மாவட்டம். . . . . . . . . மேல்முறையீட்டாளர்
( திரு. T. முருகானந்தம், வழக்கறிஞர்)

எதிர்

1) செயற் பொறியாளர்/இ&ப/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
98, சிறுபூங்கா தெரு, காவேரி நகர்,
குளித்தலை – 639 104.

2) உதவி செயற் பொறியாளர்/இ&ப/அய்யர்மலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
சிவயம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா – 639 120.

3) உதவி பொறியாளர்/ இ&ப /அய்யர்மலை/தெற்கு,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
சிவயம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா – 639 120. . . . . . . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. G. பன்னீர்செல்வம், உதவி செயற் பொறியாளர்/அய்யர்மலை &
திரு. B. கார்த்தி உதவி பொறியாளர்/தெற்கு/அய்யர்மலை)

**<u>கேட்புரை நாள் : 11–1–2018</u>**

**<u>ஆணை நாள் : 28.05.2018</u>**

திரு. நிஸார்கான், த/பெ லால்கான், குளித்தலை அஞ்சல் கரூர் மாவட்டம் அவர்களின் 7.11.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 67 / 2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.1.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளர், கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டம், கருப்பத்தூர் கிராமம், சர்வே எண்.377/1 மற்றும் 377/3–ல் அவருக்கு சொந்தமான நிலப்பிரச்சினை சம்பந்தமாக குளித்தலை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.255/2016 உள்ளதாகவும், எனவே நீதிமன்ற இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரை எவ்வித மின் இணைப்பும் வழங்காதிருக்க எதிர்மனுதாரர்களுக்கு ஆணையிடும்படி கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மனுதாரர், கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டம், கருப்பத்தூர் கிராமம், சர்வே எண்.377/1 மற்றும் 377/3–ல் தனக்கு சொந்தமாக 2.57 ஏக்கர் நிலம் உள்ளது என்றும், மேற்படி இடத்திற்கு பக்கத்தில் வசிக்கும் 1) கருப்பண்ணன், த/பெ.சுப்பையா உடையார், 2) கார்வேந்தன், த/பெ.கருப்பண்ணன், ஆகியோர் பெயரில் குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தனது சொந்தனுபவத்தில் தடையூறு செய்யக்கூடாது என்று அ.வ.எண்.255/2016 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் மின்வாரியத்தினர் எவ்வித மின் இணைப்பும் வழங்க கூடாது எனவும், பிரச்சனைக்குரிய இடத்தை நீதிமன்றம் மூலம் அளக்கவும், மனு கொடுத்துள்ளதாகவும், அவை அனைத்தும் நிலுவையில் உள்ளதாகவும் இது சம்மந்தமாக அரசு வழக்கறிஞர் அவர்களும் மின் இணைப்பு வழங்க வேண்டாம் என்று கருத்து தந்துள்ளதாகவும், இதனிடையில் பிரச்சனைக்குரிய சொத்தில் மின் இணைப்பு வழங்க கூடாது என அரசு வழக்கறிஞர் கொடுத்த கருத்துக்கு மாறுபட்ட மற்றொரு கருத்து பெற்று மின் இணைப்பு வழங்கிட உதவி மின் பொறியாளரும், உதவி செயற்பொறியாளரும் தீவிர முயற்சி செய்வதாகவும், அதனை தடுத்து

மேற்படி விசயத்தில் தலையிட்டு நீதிமன்ற இறுதி உத்திரவு பிறப்பிக்கும் வரை எவ்வித மின் இணைப்பும் வழங்காதிருக்க நுகர்வோர் மன்றத்தை நாடியுள்ளார். மன்றம் தனது ஆணையை 24.10.2017 அன்று வழங்கியுள்ளது.

2.2 மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனு எண்.67/2017ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 கரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 24.10.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*<u>“மன்றத்தின் தீர்வு</u>*

*திரு. கார்வேந்தன் அவர்கள் விண்ணப்பித்துள்ள கருப்புத்தூர் கிராமம் சர்வே எண்.377/2ல் நீதிமன்றத்தில் தடை எதுவும் இல்லாத காரணத்தினாலும், அரசு வழக்கறிஞரின் கருத்துருவின்படி, மின்இணைப்பு வழங்குவதற்கு எந்தவித தடையும் இல்லாத காரணத்தினாலும், திரு. கார்வேந்தன் அவர்களுக்கு கருப்பத்தூர் கிராமம் சர்வே எண்.377/2 ஐ உறுதி செய்து மனுதாரர் மின்இணைப்பு வழங்குவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்ததின் பேரில் திரு. கார்வேந்தன் அவர்களுக்கு மின்வாரிய விதிகளின்படி கருப்பத்தூர் கிராமம் சர்வே எண்.377/2 நிலத்தை உறுதி செய்து மின்இணைப்பு வழங்கலாம் என மன்றம் தீர்வு செய்யப்படுகிறது.*

*மேற்படி மனு எண்.16/2017 நாள் 7.10.2017 ஆனது இம்மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது என தீர்வு செய்யப்படுகிறது. ”*

## 4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

4.1 மேல்முறையீட்டாளர், கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டம், கருப்பத்தூர் கிராமம், சர்வே எண்.377/1 மற்றும் 377/3–ல் தனக்கு சொந்தமாக 2.57 ஏக்கர் நிலம் உள்ளது என்றும், மேற்படி இடத்திற்கு பக்கத்தில் வசிக்கும் 1) கருப்பண்ணன், த/பெ.சுப்பையா உடையார், 2) கார்வேந்தன், த/பெ.கருப்பண்ணன், ஆகியோர் பெயரில் குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தனது சொந்தனுபவத்தில் தடையூறு செய்யக்கூடாது என்று அ.வ.எண்.255/2016 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் மின்வாரியத்தினர் எவ்வித

மின் இணைப்பும் வழங்க கூடாது எனவும், பிரச்சனைக்குரிய இடத்தை நீதிமன்றம் மூலம் அளக்கவும் மனு கொடுத்துள்ளதாகவும், அவை அனைத்தும் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

4.2 இது சம்மந்தமாக அரசு வழக்கறிஞர் அவர்களும் மின் இணைப்பு வழங்க வேண்டாம் என்று கருத்து தந்துள்ளதாகவும், இதனிடையில் பிரச்சனைக்குரிய சொத்தில் மின் இணைப்பு வழங்க கூடாது என அரசு வழக்கறிஞர் கொடுத்த கருத்துக்கு மாறுபட்ட மற்றொரு கருத்து பெற்று மின் இணைப்பு வழங்கிட உதவி மின் பொறியாளரும், உதவி செயற்பொறியாளரும் தீவிர முயற்சி செய்வதாகவும், அதனை தடுத்து மேற்படி விசயத்தில் தலையிட்டு நீதிமன்ற இறுதி உத்திரவு பிறப்பிக்கும் வரை எவ்வித மின் இணைப்பும் வழங்காதிருக்க நுகர்வோர் மன்றத்தை நாடியுள்ளார்.

4.3 மின் வாரியத்தினரும், கீழமை மன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதிலிலும் புதிய தொழில் மின் இணைப்பு பெற அமைக்கப்பட்டுள்ள செட் உள்ள இடம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதாலும், வாரிய தரப்பினரை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளதாலும் மேற்படி இடம் யாருக்கு சொந்தம் என்று தெரியும் வரை மின் இணைப்பு வழங்க வேண்டாம் என அரசு வழக்கறிஞரிடமிருந்து சட்ட கருத்துரை 3.5.2017 அன்று பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

4.4 மேல்முறையீட்டாளர், கருப்பத்தூர் கிராமம், சர்வே எண்.377/1 மற்றும் 377/3ல் சொந்தமாக 2.57 ஏக்கர் நிலம் உள்ளதாகவும் தனது சொத்தனுபவத்தில் தடையூறு செய்யக்கூடாது என்று அ.வ.எண்.255/2016 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், திரு. கார்வேந்தன் அவர்கள் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் தனக்கு சொந்தமான நிலத்தில் உள்ளது என்றும் எனவே, அந்த தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தினை உறுதி செய்து மின் இணைப்பு தருவதற்கு ஆட்சேபனை இல்லை என்று மன்றத்தில் தெரிவித்திருந்தார்.

4.5 இதனிடையே அவருடைய கருத்தை சரிவர பரிசீலிக்காமல் அவரது மனுவைமுடித்து மின்இணைப்பு வழங்க உத்திரவாகியுள்ளதன் பேரில் அவர் மேல்முறையீட்டை சமர்ப்பித்துள்ளார்.

4.6 கரூர் மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் பிறப்பித்த உத்திரவு சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் முற்றிலும் எதிரானதாகும். கரூர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றமானது சரியான முறையில் ஆவணங்களையும் மனுதாரர் தெரிவித்துள்ள கருத்துக்களை சரிவர ஆராயாமல் உத்திரவு பிறப்பித்துள்ளது சட்டப்படி சரியானதல்ல.

4.7 மேல்முறையீட்டாளர் தரப்பில் கோர்ட் மூலம் சர்வே செய்ய மனு தாக்கல் செய்துள்ள விபரத்தையும் மின் வாரியத்தை தரப்பினராக சேர்க்க மனுகொடுத்து நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள விபரத்தை பரிசீலிக்க தவறிவிட்டது. மேலும், சிவில் நீதிமன்றத்தில் மின்வாரியம் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகி இன்னும் பதிலளிக்காமல் வழக்கு தள்ளி போடப்பட்டு வருவதை பரிசீலிக்க கீழமை நீதிமன்றம் தவறிவிட்டது.

4.8 கடந்த 7.9.2017 அன்று சிவில் நீதிமன்றத்தில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட status quo to be maintained உத்திரவானது நீட்டிக்கப்படாமல் இருப்பதை தவறாக ரத்து செய்யப்பட்டுவிட்டதாக மின் வாரியம் தரப்பில் தவறாக பதிலளிக்கப்பட்டுள்ளதை கீழமை மன்றம் சரிவர பரிசீலிக்க தவறிவிட்டது. இது தவிர மேற்படி உத்தரவு நீட்டிக்கப்படாத செயலானது நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு administrative mistake மூலம் ஏற்பட்டதாகும். அதனை சரி செய்ய எனது தரப்பில் உடனடியாக மனு செய்யப்பட்டு அந்த மனு ஐ.ஏ.848/2017 என்ற நம்பரில் விசாரணைக் கோப்பில் எடுக்கப்பட்டதை பரிசீலிக்க கீழமை மன்றம் தவறிவிட்டது.

4.9 கார்வேந்தனின் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ள இடம் எந்த இடம், அந்த இடம் எந்த சர்வே எண்ணில் வருகின்றது என்பதை தெளிவாக மின்வாரியத்தினர் ஊர்ஜிதம் செய்யாமல் பணிகளை மேற்கொள்வதன் மூலம் மேல்முறையீட்டாளருக்கு பெருத்த பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

4.10 மின் இணைப்பு கோருபவர் தன்னுடைய சர்வே எண்ணிற்குட்பட்ட இடத்தை அளந்து அத்து நிர்ணயித்து தர முன்வராததை மின்வாரியம் பரிசீலிக்க முன் வராமல் அவசரகதியில் செயல்படுவதை பரிசீலிக்க கீழமை மன்றம் தவறிவிட்டது.

4.11 கார்வேந்தனுக்கு மின் இணைப்பு வழங்குவதில் ஆட்சேபனையில்லை என்றும், ஆனால் அதற்கு முன் இடத்தினை உறுதி செய்ய வேண்டும் என்பதை சரிவர பரிசீலிக்க கீழமை மன்றம் தவறிவிட்டது. அவ்வாறு சரிவர பரிசீலிக்காமல் எனக்கு ஆட்சேபனையில்லை என தெரிவித்ததன் பேரில் மின் இணைப்பு வழங்கலாம் என தவறாக கீழமை மன்றம் முடிவுசெய்த செயல் ஏற்புடையதல்ல. சட்டப்படி ரத்து செய்யத்தக்கதாகும்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 கரூர் மாவட்ட உரிமையில் நீதிமன்றம், குளித்தலையில் ஏற்கனவே நடைபெற்று வரும் அசல் வழக்கு எண்.OS.225/2016–ல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வழக்கு

விசாரணை நடைபெற்ற 24.10.2017 அன்று பிரதிவாதிகளாக இல்லை என்பதும் மேற்படி வழக்கு விசாரணை குறித்து சரியான முறையில் பரிசீலித்து கரூர் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5.2 அரசு வழக்கறிஞர் இரண்டு முறை 03.05.2017 மற்றும் 16.09.2017 ஆகிய நாட்களில் சட்டக்கருத்துரு வழங்கி உள்ளார். முதல் முறை கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலையில் ஏற்கனவே திரு. L.நிஸார்கான் மற்றும் திரு கருப்பண்ணன் வகையறா ஆகியோருக்கு இடையே நடைபெற்று வந்த அசல் வழக்கு எண். OS.225/2016–ல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகளை பிரதிவாதிகளாக புதியதாக சேர்க்கப்பட்டு இருந்ததாலும், தற்போது உள்ள நிலையே (Status Quo) தொடர வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்ததாலும், ஆட்சேபனைக்குரிய இடத்தில் கரூர் மாவட்டம், K.R.புரம் தாலுக்கா, கருப்பத்தூர் கிராம புல எண். 377/2–ல் புதிய தொழில் மின் இணைப்பு வழங்க வேண்டாம் என அரசு வழக்கறிஞர் சட்டக்கருத்துரு வழங்கி இருந்தார். மீண்டும் மேற்படி வழக்கிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகளை பிரதிவாதிகளிலிருந்து விடுவிக்கப்பட்டதாலும், ஏற்கனவே வழங்கப்பட்ட தடை உத்தரவு நீட்டிக்கப்படாததாலும் மீண்டும் ஒரு சட்டக்கருத்துரு 16.09.2017 அன்று அரசு வழக்கறிஞர் வழங்கியுள்ளார். மேற்படி சட்டக்கருத்துருவில் புதிய தொழில் மின் இணைப்பு வழங்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி இடத்தில் திரு.S.K.கார்வேந்தன் அவர்கள் புதிய தொழில் மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலமாக அளித்திருந்த விண்ணப்பம் உதவி மின் பொறியாளர்/ இயக்கலும் காத்தலும்/தெற்கு/அய்யர்மலை பிரிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

5.3 கரூர் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அனைத்து ஆவணங்கள் மற்றும் திரு.L.நிஸார்கான் அவர்களின் நேரடி விளக்கம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5.4 மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் உரிய முறையில் ஆஜராகி வருகின்றார் என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

5.5 07.09.2017 அன்று கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலையில் (அசல் வழக்கு எண். OS.225/2016) பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை நன்கு ஆராய்ந்து அதன் அடிப்படையில் உரிய உத்தரவு கரூர் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், நீதிமன்றத்தில் திரு.L.நிஸார்கான் தரப்பில் அளித்துள்ள தடை உத்தரவு விண்ணப்பம் IA.848/2017 குறித்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து எவ்வித அறிவிப்பும் பெறப்படவில்லை எனவும், 24.10.2017 அன்று நடைபெற்ற கரூர் மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திலும் திரு.L.நிஸார்கான் அவர்கள் இதுகுறித்து ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை.

5.6 திரு.S.K.கார்வேந்தன் அவர்கள் புதிய தொழில் மின் இணைப்பு வேண்டி அவரது தந்தை திரு.கருப்பண்ணன் அவர்களுக்கு சொந்தமான கரூர் மாவட்டம், K.R.புரம் தாலுக்கா, கருப்பத்தூர் கிராம புல எண்.377/2–ல் அவரது சம்மதத்துடன் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி தொழில் மின் இணைப்பு பெற உள்ள இடம் திரு.கருப்பண்ணன் என்பவருக்கு சொந்தம் என கருப்பத்தூர் கிராம நிர்வாக அலுவலர் வருவாய் ஆவணங்கள் அளித்துள்ளார். எனவே, மேல்முறையீட்டாளருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

5.7 மேற்படி இடம் வருவாய் ஆவணங்களை கொண்டு கள ஆய்வு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. கரூர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அனைத்து ஆவணங்கள் மற்றும் நேரடியாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கத்தின் அடிப்படையிலும் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

5.8 எனவே, மேலும், திரு.S.K.கார்வேந்தன் அவர்களுக்கு (IIIA1) புதிய தொழில் மின் இணைப்பு எண்.046–010–107 நாள் 16.12.2017 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதனை பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 11.1.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. நிஸார்கான் சார்பாக திரு. T. முருகானந்தம், வழக்கறிஞர், அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. G. பன்னீர்செல்வம், உதவி செயற்பொறியாளர்/அய்யர்மலை & திரு. B.கார்த்தி உதவிபொறியாளர்/தெற்கு/அய்யர்மலை ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

**7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

7.1 மேல்முறையீட்டாளர் அவர்கள் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் நீதிமன்றத்தில் அ.வ.எண்.255/2016 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கு முடியும் வரை மின்வாரியத்தினர் எவ்வித மின் இணைப்பும் வழங்க கூடாது எனவும், பிரச்சனைக்குரிய இடத்தை நீதிமன்றம் மூலம் அளக்கவும் மனு கொடுத்துள்ளதாகவும், அவை அனைத்தும் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 இது சம்மந்தமாக அரசு வழக்கறிஞர் அவர்களும் மின் இணைப்பு வழங்க வேண்டாம் என்று கருத்து தந்துள்ளதாகவும், இதனிடையில் பிரச்சனைக்குரிய சொத்தில் மின் இணைப்பு வழங்க கூடாது என அரசு வழக்கறிஞர் கொடுத்த கருத்துக்கு மாறுபட்ட மற்றொரு கருத்து பெற்று மின் இணைப்பு வழங்கிட உதவி மின் பொறியாளரும், உதவி செயற்பொறியாளரும் தீவிர முயற்சி செய்வதாகவும், அதனை தடுத்து மேற்படி விசயத்தில் தலையிட்டு நீதிமன்ற இறுதி உத்திரவு பிறப்பிக்கும் வரை எவ்வித மின் இணைப்பும் வழங்காதிருக்கவும் வேண்டினார்.

7.4 மேலும் தான் குறைதீர் மன்ற கூட்டத்தில் தெரிவித்தபடி தொழிற்சாலை அமைந்துள்ள இடம் தனக்கு சொந்தமான நிலத்தில்தான் உள்ளது என்றும் எனவே, அந்த தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தினை உறுதி செய்து அதன்பின் கார்வேந்தனின் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்க தனக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியதில் மாற்றுக் கருத்து இல்லை என்றும் ஆனால் அவ்வாறு உறுதிசெய்யும் வரை மின்இணைப்பு வழங்குவதை நிறுத்தி வைக்க வேண்டியதாகவும், ஆனால் மன்றம் அவருடைய கருத்தை சரிவர பரிசீலிக்காமல் அவரது மனுவைமுடித்து மின்இணைப்பு வழங்க உத்திரவிட்டதால் தான் இந்த மேல்முறையீட்டை சமர்ப்பித்தாக தெரிவித்தார்.

7.5 மேலும் அவரது தரப்பில் கோர்ட் மூலம் சர்வே செய்ய மனு தாக்கல் செய்துள்ள விபரத்தையும் மின் வாரியத்தை தரப்பினராக சேர்க்க மனுகொடுத்து நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள விபரத்தை பரிசீலிக்க தவறிவிட்டதாகவும், சிவில் நீதிமன்றத்தில் மின்வாரியம் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகி இன்னும் பதிலளிக்காமல் வழக்கு தள்ளி போடப்பட்டு வருவதை பரிசீலிக்க கீழமை நீதிமன்றம் தவறிவிட்டதாகவும் தெரிவித்தார்.

7.6 கடந்த 7.9.2017 அன்று சிவில் நீதிமன்றத்தில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட Status Quo to be maintained உத்தரவானது நீட்டிக்கப்படாமல் இருப்பதை தவறாக ரத்து செய்யப்பட்டுவிட்டதாக மின் வாரியம் தரப்பில் தவறாக பதிலளிக்கப்பட்டுள்ளதை கீழமை மன்றம் சரிவர பரிசீலிக்க தவறிவிட்டதாகவும், அதனை சரி செய்ய தனது தரப்பில் உடனடியக மனு செய்யப்பட்டு அந்த மனு ஐ.ஏ.848/2017 என்ற நம்பரில் விசாரணைக் கோப்பில் எடுக்கப்பட்டதையும் பரிசீலிக்க கீழமை மன்றம் தவறிவிட்டதாக தெரிவித்தார். எனவே, கீழமை மன்றம் முடிவுசெய்த செயல் ஏற்புடையதல்ல என்பதால் அதை சட்டப்படி ரத்து செய்யக்கோரினார்.

8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர்கள் அவர்களின் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினர்.

8.2 மேலும் மேல்முறையீட்டாளர் தெரிவித்தபடி அரசு வழக்கறிஞர் கொடுத்த கருத்துக்கு மாறுபட்ட மற்றொரு கருத்து பெறவில்லையெனவும் இதுசம்பதமாக அரசு வழக்கறிஞர் இரண்டு முறை 03.05.2017 மற்றும் 16.09.2017 ஆகிய நாட்களில் சட்டக்கருத்துரு வழங்கி உள்ளதாக தெரிவித்தார். முதல் முறையில் கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலையில் ஏற்கனவே திரு. L.நிஸார்கான் மற்றும் திரு கருப்பண்ணன் வகையறா ஆகியோருக்கு இடையே நடைபெற்று வந்த அசல் வழக்கு எண். OS.225/2016–ல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகளை பிரதிவாதிகளாக புதியதாக சேர்க்கப்பட்டு இருந்ததாலும், தற்போது உள்ள நிலையே (Status Quo) தொடர வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்ததாலும், ஆட்சேபனைக்குரிய புல எண். 377/2–ல் புதிய தொழில் மின் இணைப்பு வழங்க வேண்டாம் என அரசு வழக்கறிஞர் சட்டக்கருத்துரு வழங்கி இருந்ததாகவும் ஆனால் மீண்டும் மேற்படி வழக்கிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகளை பிரதிவாதிகளிலிருந்து விடுவிக்கப்பட்டதாலும், ஏற்கனவே வழங்கப்பட்ட தடை உத்தரவு

நீட்டிக்கப்படாததாலும் மீண்டும் ஒரு சட்டக்கருத்துரு 16.09.2017 அன்று அரசு வழக்கறிஞர் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

8.3 அரசு வழக்கறிஞர் 16.09.2017 வழங்கிய சட்டக்கருத்துருவில் புதிய தொழில் மின் இணைப்பு வழங்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டதால்தான் மேற்படி இடத்தில் திரு.S.K.கார்வேந்தன் அவர்கள் புதிய தொழில் மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலமாக அளித்திருந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் உதவி மின் பொறியாளர்/ இயக்கலும் காத்தலும்/ தெற்கு/அய்யர்மலை பிரிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். மேலும் மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் உரிய முறையில் ஆஜராகி வருவதாவும் தெரிவித்தார்.

8.4 நீதிமன்றத்தில் திரு.L.நிஸார்கான் தரப்பில் அளித்துள்ள தடை உத்தரவு விண்ணப்பம் IA.848/2017 குறித்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து எவ்வித அறிவிப்பும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்தார். திரு.L.நிஸார்கான் அவர்களும் இதுகுறித்து ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

8.5 இது தவிர மேற்படி தொழில் மின் இணைப்பு பெற உள்ள இடம் திரு.கருப்பண்ணன் என்பவருக்கு சொந்தம் என கருப்பத்தூர் கிராம நிர்வாக அலுவலர் வருவாய் ஆவணங்கள் அளித்துள்ளதாகவும், அதன்பின் மேற்படி இடம் வருவாய் ஆவணங்களை கொண்டு கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

8.6 Status Quo உத்தரவானது நீட்டிக்கப்படாததாலும், வருவாய் ஆவணங்களை கொண்டு களஆய்வு செய்யப்பட்டதின் அடிப்படையிலும் திரு.S.K.கார்வேந்தன்அவர்களுக்கு (IIIA1) புதிய தொழில் மின் இணைப்பு எண்.046–010–107 நாள் 16.12.2017 அன்று வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது வழக்கெழு வினாவானது, மேல் முறையீட்டாளர் குளித்தலை நீதிமன்ற அ.வ.எண்.255/2016 ல் நீதிமன்ற இறுதி உத்திரவு

பிறப்பிக்கும் வரை திரு.S.K.கார்வேந்தன்அவர்களுக்கு எவ்வித மின் இணைப்பும் வழங்காதிருக்க எதிர்மனுதாரர்களுக்கு ஆணையிடும்படி கோரியுள்ளது ஏற்புடையதுதானா ? என்பதாகும்.

**9.2** இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களையும் மற்றும் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது திரு.S.K.கார்வேந்தன் அவர்கள் புதிய தொழில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள கரூர் மாவட்டம், K.R.புரம் தாலுக்கா, கருப்பத்தூர் கிராம புல எண் சம்பந்தமாக மேல்முறையீட்டாளருக்கும் திரு.S.K.கார்வேந்தன் அவர்களுக்கும் குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.255/2016 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் ஆகி தற்பொழுது வரை நிலுவையில் உள்ளதாக அறியமுடிகிறது.

**9.3** மேலும் மேற்படி வழக்கின் தொடர்ச்சியாக 22.03.2017 அன்று தொடரப்பட்ட இ.ம.எண்.355/2017–ல் உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் ஆகியோர்களை அவசிய தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு இருந்தனர். ஆனால் மேற்படி வழக்கில் நீதிமன்றம் விதித்திருந்த Status Quo உத்திரவை இரத்து செய்து விட்டதால் மேற்படி வாரிய தரப்பு பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டதாலும் கரூர் மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் திரு.கார்வேந்தன் அவர்களுக்கு சர்வே எண்.377/2 ல் மின்வாரிய விதிகளின்படி சர்வே எண்.377/2 நிலத்தை உறுதி செய்து மின் இணைப்பு வழங்கலாம் என்று தீர்வு செய்துள்ளது.

**9.4** ஆனால் மேல்முறையீட்டாளரோ கடந்த 7.9.2017 அன்று சிவில் நீதிமன்றத்தில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட status quo உத்தரவானது நீட்டிக்கப்படாமல் இருப்பதை தவறாக ரத்து செய்யப்பட்டுவிட்டதாக மின் வாரியம் தரப்பில் தவறாக பதிலளிக்கப்பட்டுள்ளதை கீழமை மன்றம் சரிவர பரிசீலிக்க தவறிவிட்டதாகவும், இது தவிர மேற்படி உத்தரவு நீட்டிக்கப்படாத செயலானது நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு administrative mistake மூலம் ஏற்பட்டதாக தெரிவித்து அதனை சரி செய்ய அவரது தரப்பில் உடனடியாக மனு செய்யப்பட்டு அந்த மனு ஐ.ஏ.848/2017 என்ற நம்பரில் 20.10.2017 அன்றே விசாரணைக் கோப்பில் எடுக்கப்பட்டதை பரிசீலிக்க கீழமை மன்றம் தவறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

**9.5** இதுசம்பந்தமாக மேல்முறையீட்டாளர் சமர்பித்த ஆவணங்களை ஆராய்ந்தபொழுது ஐ.ஏ.848/2017 விசாரணைக் கோப்பில் எடுக்கப்பட்டு 20.10.2017 அன்று விசாரணை நடைபெறும் என்று பதிவாகியுள்ளதும் அன்றைய தினம் நீதிபதி விடுமுறையில் இருந்ததால் விசாரணை தேதி

25.10.2017 அன்று நடைபெறும் என்று பதிவாகியுள்ளது. மேலும் வாரியத் தரப்பு வழக்கறிஞரும் இதுசம்பந்தமான விசாரணைக்கோப்பில் Taken Notice என்று பதிவு செய்துள்ளார். மேலும் அதே கோப்பில் 25.10.2017 அன்று Counter Filed என்றும் விசாரணை 02.11.2017 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சி 11.12.2017 வரை பதிவிலுள்ளது. எனவே கரூர் மின்பகிர்மான வட்ட குறைதீர் மன்றம் 24.10.2017 அன்று தீர்ப்பு வழங்கிய நாளில் மேல்முறையீட்டாளரின் வழக்கானது நிலுவையில் உள்ளது என்பதை உறுதிசெய்ய முடிகிறது.

9.6 பத்தி 9.5 உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் தொடர்ந்த வழக்கு அ.வ.எண்.255/2016 மற்றும் ஐ.ஏ.848/2017 தற்பொழுதுவரை நிலுவையில் உள்ளதாக நான் கருதுவதால் இதுகுறித்து மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 17. xxx xxx xxx*

*xxx xxx xxx*

*(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரரின் மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்தமுறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும்.*

*பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.''*

**9.7** மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டிலுள்ள புகார் சம்பந்தமான வழக்கு நீதிமன்ற நடவடிக்கையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தால் அத்தகைய முறையீட்டினை மின் குறைதீர்ப்பாளர் ஏற்க முடியாது என்று தெரிகிறது.

**9.8** இந்த வழக்கில் திரு.S.K.கார்வேந்தன் அவர்கள் புதிய தொழில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள கரூர் மாவட்டம், K.R.புரம் தாலுக்கா, கருப்பத்தூர் கிராம புல எண் சம்பந்தமாக மேல்முறையீட்டாளருக்கும் திரு.S.K.கார்வேந்தன் அவர்களுக்கும் குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.255/2016 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கு முடிவுறாதநிலையில் திரு.S.K.கார்வேந்தன் அவர்கள் மின் இணைப்பு வேண்டி எதிர்மனுதாரர்களை அணுகியதால் மேல்முறையீட்டாளர் மின் வாரியத்தினரையும் தரப்பினராக சேர்க்க மனுசெய்து அவர்களும் ஐ.ஏ.354/2017 மற்றும் ஐ.ஏ.355/2017 மூலம் பிரதிவாதிகளாக் சேர்க்கப்பட்டனர். அதன்பிறகு ஐ.ஏ.355/2017 நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதால் மேல்முறையீட்டாளர் 12.04.2017 அன்று வழங்கிய உத்திரவினை ரத்து செய்து மனுவினை Restore செய்து உத்திரவிட 08.09.2017 அன்று நீதிமன்றத்தில் மனு செய்து அம்மனுவானது ஐ.ஏ.848/2017 என்று பதிவாகி தற்பொழுதுவரை தொடர்ந்து விசாரணையில் உள்ளது.

**9.9** எனவே மேல்முறையீட்டாளரின் மேற்கண்ட கோரிக்கை தொடர்பான சம்பந்தப்பட்ட நுதல் பொருள் பற்றிய வழக்கு ஒன்று நீதிமன்றத்தின் விசாரணை நிலையில் உள்ளது என்று தெரிகிறது. எனவே, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி17(4)(ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10 <u>கவனிப்பாய்வு :</u>**

**10.1** பத்தி 9–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் தொடர்ந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையிலும், மேலும் மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் தீர்விற்கு எதிராக மின்குறைத் தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்திருந்து அதுசம்பந்தமான மேல்முறையீடும் நிலுவையில் இருந்த நிலையில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட திரு.S.K.கார்வேந்தன்அவர்களுக்கு (IIIA1) புதிய தொழில் மின் இணைப்பு எண்.046–010–107 ஆனது 16.12.2017 நாளன்று வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் (1) தனது 10.01.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

**10.2** வழக்கு நிலுவையில் உள்ளபோது திரு.S.K.கார்வேந்தன்அவர்களுக்கு எவ்வாறு மின்இணைப்பு வழங்கப்பட்டது என்று வினவியபோது தங்களுக்கு மின் இணைப்பு வழங்கிய நாளதுவரை வழக்கு நிலுவையில் இருந்தது தெரியாது என்றும் மேலும் மின் குறைதீர் மன்ற உத்தரவையே தாங்கள் நிறைவேற்றியதாகவும் எதிர்மனுதாரர்கள் தெரிவித்தார்கள்.

**10.3** பத்தி 9–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் தொடர்ந்த வழக்கு நீதிமன்றத்ததில் நிலுவையில் இருந்த நிலையில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாமல் அவசரகதியில் மின் இணைப்பு வழங்கிய எதிர்மனுதாரர்களின் செயல் மிகுந்த கண்டனத்திற்குரியது. மேலும், குறைதீர் மன்றம் மற்றும் மின்குறை தீர்ப்பாளரின் நடவடிக்கைகள் சிவில் நீதிமன்ற நடவடிக்கைகளாக கருதப்படவேண்டும் என்ற சாதாரண நடைமுறை விதிகள் கூட எதிர்மனுதாரர்களுக்கு தெரியாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். அவ்வாறு அறிந்திருந்தால் குறைதீர் மன்ற முறையீட்டிற்கு எதிராக மின்குறைத் தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்திருந்து அம்முறையீடு நிலுவையில் இருந்த நிலையில் திரு. S.K. கார்வேந்தன் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கியதை தவிர்த்திருக்கலாம்.

**10.4** மேலும், கரூர் மின் நுகர்வோர் குறைதீர் மன்ற விசாரணையிலும் எதிர்மனுதாரர்கள் மேற்கண்ட உண்மைகளை மறைத்து பதிலுரை அளித்ததின் மூலம் குறைதீர் மன்றமும் தவறான முடிவெடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டதாக நான் கருதவேண்டியுள்ளது. எனவே, இது சம்பந்தமாக உரிய விசாரணை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உரிமதாரரான கரூர் மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**11.** **<u>முடிவுரை :</u>**

**11.1.** மேற்கண்ட பத்தி 9–இல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டு மனு எண்.67/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. நிஸார்கான்,
த/பெ லால்கான்,
எண்.49, மேலமணத்தட்டை,
குளித்தலை அஞ்சல், கரூர் மாவட்டம்.

2) செயற் பொறியாளர்/இ&ப/குளித்தலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
98, சிறுபூங்கா தெரு, காவேரி நகர்,
குளித்தலை – 639 104.

3) உதவி செயற் பொறியாளர்/இ&ப/அய்யர்மலை,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
சிவயம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா – 639 120.

4) உதவி பொறியாளர்/ இ&ப /அய்யர்மலை/தெற்கு,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
சிவயம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா – 639 120.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3, கோவை ரோடு, கரூர்– 639 002.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.